# 2018 ஏப்ரல் 03ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2018-04-03

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

## சபாநாயகரின் அறிவித்தல்கள்

'A' : "நீதித்துறை (திருத்தம்)" எனும் சட்டமூலம் சம்பந்தமான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு
'B' : அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் சட்டமூலங்களுக்கான சான்றுரை எழுதப்படல்
'C' : கௌரவ ஈ. சரவணபவன், பா.உ. அவர்களினது சிறப்புரிமை மீறப்பட்டதாக கேள்வி எழுப்பிய விடயம்

## பத்திரங்கள் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 59 ஆம் மற்றும் 63 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 (2) ஆம் பிரிவின் (ப) என்னும் பந்தியின் கீழ் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மருந்துகளைப் பதிவுசெய்தலும் அவற்றுக்கு உரிமமளித்தலும் (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 05 ஆம் திகதிய 2052/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

## குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

(i) போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையை அக்குழுவின் தவிசாளர் கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

(ii) உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையை அக்குழுவின் தவிசாளர் கௌரவ நலின் பண்டாற ஜயமஹ அவர்கள் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

(iii) அரசாங்க நிதி பற்றிய குழுவின் அறிக்கையை அக்குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

(iv) வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையை அக்குழுவின் தவிசாளர் கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி அவர்கள் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ சந்தித் சமரசிங்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

## மனுக்களைச் சமர்ப்பித்தல்

(i) கௌரவ கபீர் ஹஷீம்
(ii) கௌரவ கயந்த கருணாதிலக்க
(iii) கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி
(iv) கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ - மூன்று மனுக்கள்
(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

<u>சட்டமூலங்கள் சமர்ப்பணம்</u>

பின்வரும் சட்டமூலங்களை அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் கௌரவ கயந்த கருணாதிலக்க அவர்கள் பிரேரித்தார்-

(i) **தேசிய கணக்காய்வு** - கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கும்; தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும்; பகிரங்க நிதி மீது கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பங்களிப்பைக் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்காக

(ii) **குடியியல் வான்செலவு (திருத்தம்)** - 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தைத் திருத்துவதற்காக

(iii) **காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)** - 2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்காக

<u>தனியார் உறுப்பினர்கள் சட்டமூலங்கள்</u>

கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களுக்கு **"சாயா மன்ற (கூட்டிணைத்தல்)"** சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

நிலையியற் கட்டளை 47(5) இன் கீழ் பாராளுமன்றத்திற்கு அறிக்கை செய்வதற்கு மேற்சொன்ன சட்டமூலம் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

<u>இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்</u>

(இன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் 1 முதல் 11 வரையான விடயங்களாகக் காணப்படும்) பின்வரும் விடயங்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டன:-

**(i) விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் பத்து கட்டளைகள்**
**(ii) ஹைட்ரோபுளோரொகாபனை (Hydroflurocarbons HFC) கட்டங் கட்டமாக குறைத்தல் சம்பந்தமாக மொன்ட்ரியெல் கூட்டமைப்பு மேற்கொண்ட கிகாலி திருத்தத்திற்கு இலங்கை இணங்கிச் செயற்படல் தொடர்பான பிரேரணை நிறைவேற்றம்**

அதனையடுத்து, 1622 மணியளவில் பாராளுமன்றமானது 2018 ஏப்ரல் 4ஆந் திகதி புதன்கிழமை 0930 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

** இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.*